www.kalvisolai.com

J - 2012

**1460(N)**

பதிவு எண் | | | | | | |

# தமிழ் - இரண்டாம் தாள்

# Language – Part A – TAMIL – Paper II

( இலக்கணம், துணைப்பாடம், கடிதம், கட்டுரை, மொழிப்பயிற்சி )

**( NEW SYLLABUS )**

நேரம் : 2 $\frac{1}{2}$ மணி ] [ மொத்த மதிப்பெண்கள் : 100

*அறிவுரை* : அனைத்து வினாக்களும் சரியாக அச்சுப் பதிவாகி உள்ளதா என்பதனை சரிபார்த்துக் கொள்ளவும். அச்சுப்பதிவில் குறையிருப்பின், அறைக் கண்காணிப்பாளரிடம் உடனடியாகத் தெரிவிக்கவும்.

*குறிப்பு* :
i) இவ்வினாத்தாள் நான்கு பிரிவுகளைக் கொண்டது.
ii) விடைகள் தெளிவாகவும் குறித்த அளவினதாகவும் அமைதல் வேண்டும்.
iii) வினா எண் 38 க்கு என படிவம் ஒன்று தனியாக வழங்கப்பட்டுள்ளது. அதை நிரப்பி முதன்மை விடைத்தாளுடன் இணைக்கவும்.

## பிரிவு - I

( மதிப்பெண்கள் : 20 )

### பகுதி - 1

உரிய விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக : 5 × 1 = 5

1. எதிர்கால இடைநிலை அமைந்துள்ள வினைமுற்றைத் தேர்ந்தெழுதுக :

அ) படிக்கிறான் ஆ) படிப்பான் இ) படிக்கின்றான் ஈ) படித்தான்.

2. தனிமொழியைத் தேர்ந்தெழுதுக.

அ) கண் ஆ) படம் பார்த்தான் இ) அந்தமான் ஈ) வைகை.

3. மாடு கன்றை ஈன்றது. இத்தொடரில் மாடு என்பது .................. ஐ குறிக்கும்.

அ) பசு ஆ) காளை இ) கன்று ஈ) எருது.

4. ஒரு பொருட்பன்மொழியைத் தேர்ந்தெழுதுக :

அ) வயிறு வலிக்கும் ஆ) செய்வினை இ) புன்கண் ஈ) நடுமையம்.

5. வடக்கு + கிழக்கு எவ்வகைப் புணர்ச்சி எனக் கூறுக.

அ) பண்புப்பெயர் புணர்ச்சி ஆ) இயல்புப் புணர்ச்சி

இ) மகரஈற்றுப் புணர்ச்சி ஈ) திசைப்பெயர்ப் புணர்ச்சி.

[ திருப்புக

www.kalvisolai.com



## பகுதி - 2

கோடிட்ட இடத்தை நிரப்புக : 5 × 1 = 5

6. ஓர் எச்சவினை பெயரைக் கொண்டு முடிந்தால் அது .................. எனப்படும்.

7. 'இது செய்வாயா ?' என்ற வினாவிற்கு 'நீயே செய்' என்று கூறுவது .................. விடை.

8. 'மாலை' இச்சிறுபொழுது .................. திணைக்குரியது.

9. 'தேன் போன்ற மொழி' - இச்சொல்லில் அமைந்துள்ள உவம உருபு .................. .

10. 'முஃடீது' - இச்சொல்லில் பயின்று வரும் குறுக்கம் .................. .

## பகுதி - 3

சுருக்கமாக விடையளிக்க : 10 × 1 = 10

11. வல்லின் மிகும் இடங்களுள் ஒன்றைச் சான்று தந்து விளக்குக.

12. தொகைச் சொல்லை விரித்தெழுதுக. முத்தமிழ்

13. இளமைப் பெயர்களைப் பொருத்துக :

| | | |
|---|---|---|
| ஆடு | — | கன்று |
| சிங்கம் | — | குட்டி |
| | — | குருளை. |

14. வேல்விழி திருக்குறள் படித்தாள் - உரிய வேற்றுமை உருபை இணைத்து எழுதுக.

15. கீழ்க்காணும் தொடரிலுள்ள ஒருமை, பன்மைப் பிழை நீக்கி எழுதுக.

    இன்று பேருந்துகள் ஓடாது

16. கீழ்க்காணும் தொடரிலுள்ள சந்திப்பிழைகளை நீக்கி எழுதுக.

    தமிழில் வரலாற்று கருத்துக்களையும், பண்பாட்டு கூறுகளையும் காண முடியும்.

17. கீழ்க்காணும் தொடர்களில் அமைந்துள்ள பிறமொழிச் சொல்லுக்குரிய தமிழ்ச்சொல் எழுதுக.

    நான் இந்த காலேஜின் ஓல்டு ஸ்டூடண்ட்

18. கீழ்க்காணும் தொடரிலுள்ள வழூஉச் சொற்களை நீக்கி எழுதுக :

    வலதுபக்கச் சுவற்றில் எழுதாதே.

19. கீழ்க்காணும் தொடருக்குப் பொருத்தமான நிறுத்தற் குறியீட்டு எழுதுக.

    தொலைக்காட்சி குளிருட்டும் கருவி செல்பேசி கணினி முதலியவற்றைப் பழுதுபார்க்கும் படிப்புகளும் உள்ளன.

20. 'வாழையடி வாழையாக' - இந்த மரபுத்தொடருக்குப் பொருளைத் தேர்ந்தெழுதுக.

    அ) பயிர்த்தொழில் ஆ) வாழைப் பயிரிடுதல்

    இ) பரம்பரை பரம்பரையாக ஈ) பயனின்றி இருத்தல்.

www.kalvisolai.com



## பிரிவு - II

( மதிப்பெண்கள் : 10 )

கீழ்க்காணும் வினாக்களுள் எவையேனும் **ஐந்தனுக்கு** விடையளிக்க : 5 × 2 = 10

21. பகுபத உறுப்பிலக்கணம் தருக - உணர்த்துவான்.
22. 'பாம்போ ? கயிறோ ' - எவ்வகை வினா ?
23. வெற்றிலை - புணர்ச்சி விதி கூறுக.
24. அடுக்குத்தொடர் என்றால் என்ன ? எடுத்துக்காட்டுடன் விளக்குக.
25. முதற்பொருள் என்பது யாது ?
26. மதில்போர் பற்றிய புறத்திணைகள் யாவை ?
27. ஐகாரக் குறுக்கத்தை எடுத்துக்காட்டுடன் விளக்குக.

## பிரிவு - III

( மதிப்பெண்கள் : 50 )

குறிப்பு : **பகுதி - 3** ல் வினா எண் 35 ல் காதுகேளாத மாணவர்களுக்கு மட்டும் மாற்றுவினா வழங்கப்பட்டுள்ளது.

### பகுதி - 1

கீழ்க்காணும் வினாக்களுள் எவையேனும் **இரண்டனுக்கு** விடையளிக்க : 2 × 5 = 10

28. வெண்பாவின் இலக்கணம் யாது ?

29. நெடும்புனலுள் வெல்லும் முதலை அடும்புனலின்
நீங்கின் அதனைப் பிற - இதில் பயின்று வந்துள்ள அணியை விளக்குக.

*அல்லது*

சொற்பொருள் பின்வருநிலையணியை விளக்குக.

30. கீழ்க்காணும் குறட்பாவிற்கு அலகிட்டு வாய்பாடு தருக.

ஒழுக்கம் விழுப்பம் தரலான் ஒழுக்கம்
உயிரினும் ஓம்பப் படும்.

### பகுதி - 2

கீழ்க்காணும் வினாக்களுள் எவையேனும் **இரண்டிற்கு** ஒவ்வொன்றிற்கும் அரைபக்க அளவில் விடையளிக்க : 2 × 5 = 10

31. கமலநாதன் எவ்வாறு மனம் திருந்தினான் என்பதை விளக்குக.
32. அண்ணா எழுதிய கடிதத்தின் கருத்துக்களைச் சுருக்கி எழுதுக.
33. அயோத்திதாசர் சமுதாயத்திற்கு ஆற்றிய தொண்டு குறித்து எழுதுக.

www.kalvisolai.com



## பகுதி - 3

34. கீழ்க்காணும் பத்தியில் அமைந்துள்ள ஆங்கிலச் சொற்களைத் தமிழாக்கம் செய்க : 3 + 2 = 5

அ) ஸ்கூலிலிருந்து வீட்டிற்குள் விரைந்து நுழைந்த பாரி, தன் ஸ்கூல்பேக்கை தூக்கிப்போட்டு விட்டு 'மம்மி வாட்டர்' என்று குரல் கொடுத்தான்.

'வீட்டிற்கு வந்தவுடன் ஏண்டா இப்படிக் கத்துகிறாய் ? கை கால்களை வாஷ் செய்து கொண்டு வா. சூடாக உனக்குப் பிடித்த டிபன் செய்து வைத்திருக்கிறேன்' என்றாள் அவன் தாய்.

ஆ) கீழுள்ள அரபு எண்களைத் தமிழெண்களாக மாற்றுக :

45, 79, 150, 250

35. கீழ்க்காணும் ஆங்கில உரைப்பகுதியைத் தமிழாக்கம் செய்க : 3 + 2 = 5

அ) Food is essential for all living beings. Without food man cannot live long. Everyman has to eat a certain quantity of food. If he eats less than that quantity his health will fail and he will fall ill. So, every man has to eat enough food to live.

ஆ) கீழ்க்காணும் ஆங்கிலப் பழமொழிகளில் எவையேனும் இரண்டனுக்கு இணையான தமிழ்ப் பழமொழிகளை எழுதுக :

1. Old is gold
2. Knowledge is power
3. Failure is the stepping stone to success
4. Live and let live.

35. *குறிப்பு* : காதுகேளாத மாணவர்களுக்கான மாற்று வினா : 5 × 1 = 5

மணிமேகலை பள்ளிக்குச் செல்லும் வழியில் கண்ணொளி இழந்த மூதாட்டி ஒருவர், சாலை ஓரத்தில் அமர்ந்து கூடை முடைதலில் ஈடுபட்டிருந்ததைப் பார்த்தாள். மூதாட்டியின் கைகள் இரண்டும் கூடை முடைதலில் விரைவாக சுழன்று கொண்டிருந்தது. இவரால் எப்படி இவ்வளவு விரைவாகச் செயல்பட முடிகிறது என மணிமேகலை வியப்படைந்தாள்.

www.kalvisolai.com



ஒருநாள் தன் இரு கண்களையும் கட்டிக் கொண்டு மணிமேகலை வீட்டிற்குள் அங்கும் இங்கும் நடந்து பார்த்தாள். அங்கு இருந்த மேசையின் மீது மோதிக் கொண்டாள். அப்போது தான் கண்ணொளி இழந்தவர்கள் பற்றி அவர்களது துன்பம் எத்தகையது என எண்ணிப் பார்த்தாள். அன்று முதல் மாற்றுத்திறனாளிகளிடம் அன்புடன் நடந்து கொள்ள வேண்டும் என்று நினைத்தாள்.

1. மணிமேகலை பள்ளி செல்லும் வழியில் யாரைப் பார்த்தாள் ?
2. மூதாட்டி என்ன செய்து கொண்டிருந்தார் ?
3. மணிமேகலை எதனைக் கண்டு வியப்படைந்தாள் ?
4. மணிமேகலை வீட்டில் என்ன செய்தாள் ?
5. மாற்றுத் திறனாளிகளிடம் எப்படி நடந்து கொள்ள வேண்டும் என மணிமேகலை நினைத்தாள் ?

## பகுதி - 4

36. கீழ்க்காணும் வினாக்களுள் ஒன்றனுக்கு விடையளிக்க : 1 × 5 = 5

அ) கீழே கொடுக்கப்பட்டுள்ள கதையை நிறைவு செய்து பொருத்தமான தலைப்பைத் தருக.

வீரமுத்து விடுமுறை நாளென்பதால் தன் தந்தையுடன் வயலுக்குச் சென்றான். தந்தை நிலத்தை உழுது கொண்டிருக்கும் பொழுது பூமிக்கடியில் கலப்பை சிக்கிக் கொண்டது. வீரமுத்துவும், அவன் தந்தையும் அந்த இடத்தைத் தோண்டிப் பார்த்த பொழுது அங்கே .....

*அல்லது*

ஆ) கீழ்க்காணும் தலைப்பில் எட்டு வரிகளுக்குக் குறையாமல் கவிதை ஒன்று எழுதுக.

நட்பு *அல்லது* மழை.

## பகுதி - 5

37. கீழ்க்காணும் பாடலின் திரண்ட கருத்தை எழுதி, அப்பாடலில் அமைந்துள்ள ஏற்புடைய நயங்களை எடுத்தெழுதுக : 1 × 5 = 5

அப்பாநான் வேண்டுதல்கேட் டருள்புரிதல் வேண்டும்
ஆருயிர்கட் கெல்லாம்நான் அன்புசெயல் வேண்டும்
எப்பாரும் எப்பதமும் எங்கணும்நான் சென்றே
எந்தைநின தருட்புகழை இயம்பியிடல் வேண்டும்
செப்பாத மேனிலைமேல் சுத்தசிவ மார்க்கம்
திகழ்ந்தோங்க அருட்சோதி செலுத்தியிடல் வேண்டும்
தப்பேது நான்செயினும் நீபொறுத்தல் வேண்டும்
தலைவநினைப் பிரியாத நிலைமையும்வேண் டுவனே.

- இராமலிங்க அடிகள்

[ திருப்புக

www.kalvisolai.com



## பகுதி - 6

38. கொடுக்கப்பட்டுள்ள வங்கிப் படிவத்தை நிரப்புக. பெயர் நிரப்பும் இடத்தில் உமது பதிவு எண்ணை மட்டும் எழுதுக. 1 × 5 = 5

## பகுதி - 7

39. அ) கீழ்க்காணும் வாழ்வியல் சூழலைப் படித்து விடையளிக்க : 3 + 2 = 5

இலக்கியா படிப்பில் படுசுட்டி. அவள்தான் வகுப்பில் எப்போதும் முதலாவதாக வருவாள். அவளுடைய தோழிகள் அவளுக்கென்ன கவலை ? அவள் அம்மா ஓர் ஆசிரியர்; அவளுக்குப் பாடத்தில் எந்த ஐயம் ஏற்பட்டாலும் உடனே தீர்த்து விடுவார். எனவே, அவள் முதல் மதிப்பெண் பெறுவதில் வியப்பேதும் இல்லை என்று கூறுவர். பள்ளியில் ஆண்டுத்தேர்வுக்குப் படிப்பதற்காக ஒருவாரம் விடுமுறை அளித்தார்கள். இலக்கியா வழக்கம்போல் படிப்பதில் கண்ணும் கருத்துமாய் இருந்தாள். அப்போது தொலைபேசி அழைப்பு வந்தது. அவளுடைய அம்மா திடீரென்று மயக்கமடைந்துவிட்டார்கள் என்றும் உடனடியாக மருத்துவமனையில் சேர்த்திருப்பதாகவும் அம்மாவுடன் பணியாற்றும் ஆசிரியர் கூறினார். இலக்கியா மிகுந்த மன அழுத்தத்திற்கு ஆளானாள்.

1. இலக்கியாவின் முன்னேற்றத்திற்கு யார் காரணம் ?
2. இலக்கியாவின் அம்மாவை எதற்காக மருத்துவமனையில் சேர்த்தார்கள் ?
3. அம்மாவுக்கு ஏற்பட்ட நிலை கண்டு இலக்கியாவின் நிலை என்ன ?

ஆ) கீழ்க்காணும் சூழலைப் படித்து விடையளிக்க :

இரண்டு நாள் பெய்த பெருமழையின் விளைவாக, அன்று பள்ளிக்கு விடுமுறை அறிவிக்கிறார்கள். பள்ளிக்கு வந்த மாணவர்கள் தத்தம் வீட்டிற்குத் திரும்புகிறார்கள். ஆனால் கதிரவனின் வகுப்புத் தோழர்கள், அவனைத் திரைப்படம் பார்க்க வருமாறு அழைக்கிறார்கள். பெற்றோருக்குத் தெரிந்தால், தன்னைக் கண்டிப்பார்கள் என்று கதிரவனுக்குத் தெரியும்; திரைப்படத்திற்குச் செல்லாவிடில் நண்பர்கள் தன்னை ஒதுக்கி விடுவார்கள் என்றும் அவன் நினைக்கிறான்.

1. இந்நிலையில் கதிரவன், தன் மனவெழுச்சிகளை எவ்வாறு கட்டுப்படுத்துவான் ?
2. கதிரவன் நிலையில் நீங்கள் இருந்தால் என்ன செய்வீர்கள் ?

www.kalvisolai.com



## பிரிவு - IV

( மதிப்பெண்கள் : 20 )

### பகுதி - 1

40. கீழ்க்காணும் வினாக்களுள் ஒன்றனுக்கு விடையளிக்க : 1 × 10 = 10

அ) நீவிர் கண்டுகளித்த இடம் குறித்து உன் நண்பனுக்குக் கடிதம் எழுதுக.

*அல்லது*

ஆ) குடிநீர் வசதிவேண்டி ஊராட்சி ஒன்றிய ஆணையருக்குக் கூட்டு விண்ணப்பம் எழுது.

### பகுதி - 2

41. கீழுள்ள வினாக்களுள் ஏதேனும் ஒன்றனுக்குக் குறிப்புகளைக் கொண்டு ஒரு பக்க அளவில் கட்டுரை எழுதுக - தலைப்பு ஒன்று தருக. 1 × 10 = 10

அ) கணினி — தோற்றம் — வளர்ச்சி — இணையம் — இணையதள வசதி — கணினி வழிக்கல்வி — கணினியின் வியத்தகு சாதனைகள் — பயன்படும் துறைகள் — உலகம் உள்ளங்கையில்.

*அல்லது*

ஆ) பாரதியார் விடுதலைப் போராட்ட வீரர் — கவிஞர் — தமிழாசிரியர் — தேசியக்கவிஞர் — முன்னறி புலவர் — சமுதாயத் தொண்டு — மொழிப்பற்று — புதுமைக்கவிஞன்.

www.kalvisolai.com



வினா எண் : 38 பதிவு எண் | | | | | |

கொடுக்கப்பட்டுள்ள வங்கிப் படிவத்தை நிரப்புக. பெயர் நிரப்பும் இடத்தில் உமது பதிவு எண்ணை மட்டும் எழுதுக. 1 × 5 = 5

## வங்கிக்கணக்கில் பணம் எடுக்கும் படிவம்

பதிந்தவர் பேரேடு நாள் ________

சேமிப்பு வங்கிக் கணக்கு எண் ________ இந்த ஆணைப்படிவத்துடன் கணக்குப் புத்தகம் இணைக்கப்பட வேண்டும்.

சேமிப்புக் கணக்கு

________ 20

________ அங்கி ________ எனக்கு அல்லது இதனைக் கொணர்பவருக்கு ரூபாய் ________ வழங்குக.

ரூ.

கணக்கு வைத்திருப்பவர் கையொப்பம்.

இப்பணம் எடுக்கும் சீட்டு மூலமாக கணக்கு வைத்திருப்பவரைத் தவிர மற்றவருக்கு ஆயிரம் ரூபாய் வரம்புவரை பணம் கொடுக்கப்படும்.